08.04.2026

O.S.No. 02/2017

PW1– முருகேசன் – த/பெ. ஆறுமுகச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1 ,3, 5– 8 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்ய நான் தான் தகவல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து ஆதியில் சுப்பிரமணிக்கு பாத்தியம் பட்டது என்றால் சரிதான்.

3. சுப்பிரமணியத்தேவருக்கு 2 மனைவிகள் பேச்சியம்மாள் மற்றும் குப்பச்சியம்மாள். பேச்சியம்மாள் மூலம் அவருக்கு ஒரு மகன். அவர் பெயர் மாடப்பத்தேவர்.

4. மேலும் 2 ம் மனைவி மூலம் அவருக்கு 5 வாரிசுகள். அவர்கள் ராமையா தேவர், மாடப்பத்தேவர், வையாளிமுத்து தேவர், முத்துவீரத்தேவர் மற்றும் முத்துசாமி தேவர்.

5. சுப்பரமணியத்தேவர் அவரின் 6 மகன்களும் சேர்ந்து 16.06.1912 ல் பாகபிரிவினை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அதுதான்

வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தென்கிழக்கில் 5 செண்ட் இடத்தை பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது சுப்பிரமணியத்தேவர் தன் கைவசமாக வைத்திருந்த நிலமாகும்.

7. சுப்பிரமணித்தேவர் இறந்து எத்தனை ஆண்டுகள் இருக்குமென்றால் எனக்கு தெரியாது. மேற்படி 5 செண்ட் நிலத்தில் தான் சுப்பிரமணித்தேவர் சமாதி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தற்போது மேற்படி நிலத்தில் என்ன உள்ளது என்றால் அதில் கட்டிடம் உள்ளது. அது எத்தனை ஆண்டுகளாக எந்த அகலத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

8. மேற்படி கட்டிடத்திற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. குடிநீர் இணைப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

9. 1ம் பிரதிவாதி கடை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 5 செண்டிற்கு வடபுறம் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 7 செண்ட் யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் அந்த ஆவணத் தரப்பினர் யாரும் நடந்துக் கொள்ளவில்லை.

10. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்தப்பிறகு தான் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எனது பிராதில் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். ஆனால் பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளேன்.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 5 செண்ட் நிலமும் அதற்கு வடபுறம் உள்ள 7 செண்ட் நிலமும் தற்போது 1ம் பிரதிவாதியின் கைவசம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி 7 செண்ட் நிலம் துரைசாமி என்ற சுப்பிரமணியத்தேவரால் அவரது மகன் முத்துசாமி என்ற குட்டிராஜாக்கு 1958 ம் ஆண்டு நன்கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. மேற்படி 7 மற்றும் 5 செண்டில் தான் சுப்பிரமணியனின் சமாதி அவரது மனைவியின் சமாதி மற்றும் ஒடுக்கக்கோவில் , 1ம் பிரதிவாதியின் வீடும் உள்ளது என்றால் சரியல்ல.

14. வழக்கு சொத்தில் டீக்கடை உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்தபோது இல்லை. தற்போது வழக்கு தாக்கல் செய்தப்பிறகு தான் வைத்துள்ளார்கள். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் ஸ்தல பார்வை செய்ய எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

15. நான் வா.சா.ஆ.12 ஆவணத்தை படித்துப்பார்த்துள்ளேன் என்றால் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.12 ஆவணத்தில் ஆவண சொத்துக்கள் தளவாய் முத்துக்கருப்பத்தேவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று துலங்காது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பழைய புல எண்.54/29 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்திரம் 47 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 47 செண்டுமே சுப்பிரமணியத்தேவருக்கு ஆதியில்

பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.12 ஆவணத்தின் படி வழக்கு சொத்தில் எவ்வித உட்பிரிவுகளும் நடக்கவில்லை என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது.

17. வா.சா.ஆ.1 ஆவணத்தின் உள்ள தென்கிழக்கு 5 செண்டு நிலமானது வா.சா.ஆ.12 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால் கிடையாது. அதை சேர்க்கவில்லை. மேற்படி 5 செண்ட் நிலத்திற்கு முத்துசாமித்தேவருக்கு பட்டா எதுவும் வழங்க வில்லை என்றால் சரிதான். அதே போல் முருகையா தேவர் மற்றும் ஆறுமுகத்தேவருக்கு தனிப்பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.12 ஆவணம் மோசடி ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணம் என்பது முன் ஆவணங்களுக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தின் அசல் தொலைந்துவிட்டது. வா.சா.ஆ.12 ஆவணத்தின் கடைசி பக்கத்தில் 1981ம் தேதிய ஆவண எண் 2504ன் படி சீர்திருத்தம் செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சீர்திருத்த ஆவணத்தை பற்றி எனது பிராதிலே முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு அதுப்பற்றி தெரியாது.

19. மேற்படி சீர்திருத்த ஆவணம் என் கைவசம் தான் உள்ளது என்றால்

சரியல்ல. மேற்படி சீர்திருத்த ஆவணம் பிராது தபசில் சொத்தை நீக்கி தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அதுநாள் தான் பிராது சீர்திருத்த ஆவணத்தை பற்றி நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

20. எனவே தான் வா.சா.ஆ.12 ஆவணத்தின் படி உட்பிரிவு பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் வழக்கு சொத்திற்கான புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால், பழைய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது, புதிய சர்வே எண் தவறாக உள்ளது.

21. எந்த ஆண்டில் புதிய சர்வே எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12 ஆவணத்தில் எந்த இடத்தில் பழைய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சியிடம் வா.சா.ஆ.12 ஆவணத்தை காட்டி பக்கம் எண் 08 ல் உள்ளது .

22. இந்த ஆவணம் எழுதப்பட்ட காலத்திலேயே புதிய சர்வே எண் இருந்தது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. வா.சா.ஆ.12 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய ரீ சர்வே எண் சரியாக தான் உள்ளது. ஆனால் பழைய சர்வே எண் தவறாக உள்ளது என்றால் சரியல்ல.

23. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.13 ஆவணத்தை நான் படித்துபார்த்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம் ஏற்படுத்தி சமயத்தில் எழுதி கொடுத்தவர் பெயரிலோ வாங்கியவர் பெயரிலோ பட்டா ஏதும் இல்லை என்றால் சரிதான்.

24. வா.சா.ஆ.13 ஆவணம் பக்கம் எண் 05 ல் வரி 9 ல் சமாதி மனை சர்வே எண் 506/27 நிர் செண்ட் 13 க்கு எல்கை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 13 செண்டிற்குள் சமதி வராது. மேலும் மேற்படி 13 செண்ட் கீழ் ஓரத்தில் தான் சமதி உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணம் எனது தூண்டுதளின் பேரில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணத்தில் முன் ஆவணத்தின் குறிப்புகள் எதுவும் கிடையாது என்று சொன்னால் 1977 உடன்படிக்கையை காண்பித்து இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணை வாக்குமூலம் பக்கம் எண் 04 பத்தி எண் 06 ல் குறிப்பாக 1988 பற்றிய சங்கதிகள் வழக்கிற்காக தவறாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் என்றால் சரியல்ல.

25. முருகையாத்தேவர் 30.08.1987 ம் ஆண்டு காலம் சென்று விட்டதாக எனது முதல் விசாரணை பக்கம் எண் 04 பத்தி 06 ல் குறிப்பிடப்பள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் 1987 ல் இறந்த நபர் 1988 ம் ஆண்டு பிராது 1ம் தபசில் சொத்தில் கீழோரமாக கடை கட்ட அனுமதி பெற்றிருக்கமுடியுமா என்று கேட்டால் கடை கட்ட அனுமதி வாங்கிய நபர் ஆறுமுகச்சாமி தேவர் தான்.

26. 1ம் தபசில் சொத்தானது பிராது 2ம் தபசில் சொத்தின் வடப்பகுதி என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தின் கிழமேல் அளவு 20.5 மீ

தென்வடல் 10.11 மீ ஆகும்.

27. 1ம் தபசில் சொத்தில் ஆறுமுகச்சாமி தேவர் தவிர முத்துச்சாமி தேவருக்கு முருகையாத்தேவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 ஆவணம் உண்மையாக இருந்திருந்தால் 1ம் தபசில் சொத்தில் ஆறுமுகச்சாமி தேவர் தவிர முத்துச்சாமி தேவருக்கே முருகையாத்தேவருக்கு எவ்வித உரிமை இருந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு உரிமை உண்டு. 1ம் தபசில் சொத்தின் மொத்த விஸ்திரனம் 5 செண்ட் ஆகும்.

28. வா.சா.ஆ. 16 வரைபடத்தில் சர்வே எண் மட்டும் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வா.சா.ஆ.16 வரைபடத்தின் சர்வே எண்ணை திருத்தி எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல.

29. பேரூராட்சி கட்டிட அனுமதி ஆவணத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணமானது 1ம் தபசில் சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்திற்கு வாங்கப்பட்ட கட்டிட அனுமதி என்றால் சரியல்ல. மேற்படி வடபுற சொத்தின் சர்வே எண் 506/26 ஆகும். 506/26 சொத்திற்கு கீழ்புறமும் தென்வடல் ரோடுதான் உள்ளது என்றால் சரிதான்.

30. வா.சா.ஆ.16 வரைபடத்தில் தென்பக்கமும் மேல்பக்கமும் யாருக்கு

பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தென்பக்கம் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொது நடைப்பாதை தான் உள்ளது. பொதுவாக பேரூராட்சி அங்கீகரிக்கப்பட்ட வரைபடமாக இருந்தால் செயல் அலுவலரின் கையொப்பமும் முத்திரையும் இருக்கும் என்றால் சரிதான்.

31. வா.சா.ஆ.16 ஆவணத்தில் கையொப்பமும் முத்திரையும் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது.

32. வா.சா.ஆ.19 ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேன் என்றால் நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.19 ஆவணத்தின் சொத்தானது பிராது 2ம் தபசில் சொத்தில் தென்கிழக்கு பகுதியில் உள்ள 12 செண்ட்–ஐ தான் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணத்தின் பொருத்து எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பொருத்து எந்த வித ஆட்சோபணை இல்லை என்றால் சரிதான் ஆனால் அது பொய்யான ஆவணம். வா.சா.ஆ.19 ஆவண சொத்தில் தான் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அதில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது ஆனால் அதில் கட்டிடம் உள்ளது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளதாக சொல்லி இருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்குமூலமே இல்லதாத வழக்கு

ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவே தள்ளுபடி செய்ய செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

33. வா.சா.ஆ.21 வரைபடம் நான் கூறிய தகவல் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் சொத்து கீழோரம் தென்வடல் 23.69 + 10.11 மீ ஆகும். மேற்படி அலவுகள் புலவரைபடத்தில் துலங்காது என்றால் சரிதான்.

34. வா.சா.ஆ.19 ஆவணத்தில் உள்ள சொத்து தான் வா.சா.ஆ.21 வரைபடத்தில் ABIG என்றால் சரிதான். இதற்குட்பட்டுதான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தென்கிழக்கு 5 செண்ட் மனையும் உள்ளது என்றால் சரிதான். இந்த இடத்திற்குள் தான் சுப்பிரமணியத்தேவர் மற்றும் அவரது மனைவியின் சமாதி உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

35. 1ம் தபசில் சொத்து வாதிகளுக்கும் 4ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் பட்டது என்று காட்டுவதற்கு எந்த வருவாய் ஆவணமோ அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணமோ நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் கார்லேசன் மற்றும் பட்டாவும் தாக்கல் செய்துள்ளேன்.

36. 5 செண்ட் நிலத்தில் உள்ள சமாதியில் ஆண்டுதோறும் குரு புஜை நடத்தி அன்னதானம் நடைபெற்று வருகிறது என்றால் சரியல்ல.

37. நான் பிறந்ததில் இருந்து அச்சம்புதூரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சுப்பிரமணியத்தேவரின் மகன் முத்துவீரத்தேவருக்கு

குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். அவருடைய பாக சொத்தை குட்டி ராஜா என்ற முத்துச்சாமி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிலம் தான் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்க பட்ட நிலத்திற்கு வடபுறம் 7 செண்ட் நிலம் என்றால் சரிதான். அதை வாங்கிய குட்டி ராஜா என்ற முத்துச்சாமி காணாமல் போய்விட்டார் என்றால் சரியல்ல. அவர் ஊரில் தான் உள்ளார். நான் கடைசியாக 2 மாதத்திற்கு முன்பு தான் பார்த்தேன். மேற்படி குட்டி ராஜா இடத்திற்கு வடபுறம் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொதுபாதை மற்றும் அதற்கு வடபுறம் தான் 1ம் தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

38. இவ்வாறு நில அமைப்பு இருக்கையில் எங்கள் அனுபவத்தை இடைஞ்சல் செய்திருக்க வேண்டுமானால் குட்டிராஜா தான் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல குட்டிராஜா எங்களை எந்த இடைஞ்சலும் செய்ய வில்லை. 2ம் தபசில் சொத்தின் ஒரு பகுதிதான் குட்டி ராஜாவின் இடம் உள்ளது என்றால் சரிதான். சாட்சி தற்போது 2ம் தபசில் சொத்தில் குட்டி ராஜாவின் இடம் இல்லை என்று கூறினார். சர்வே எண் தான் ஒன்றாக உள்ளது. வழக்கு சொத்தின் மொத்தம் விஸ்திரனம் எவ்வளவு என்றால் 47 செண்ட். 2ம் தபசில் சொத்தின் மொத்தம் விஸ்திரனம் 35 செண்ட். மீதம் உள்ள 12 செண்ட் எங்குள்ளது என்றால் இதே சர்வே எண்ணின் தென்கிழக்கில் உள்ளது. மேற்படி 12 செண்டிற்கு மேற்கு

பக்கமும் வடக்கு பக்கமும் 35 செண்ட் உள்ளது என்றால் சரிதான்.

39. எனது பிராது 2ம் தபசில் சொத்திற்கு எல்கை மால் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பிராது 2ம் தபசில் சொத்து விபரத்தில் பழைய சர்வே எண் 54/29ல் / புதிய சர்வே எண் 506/27 ல் 12 செண்ட் நீங்கலாக 35 செண்ட் என்று குறிப்பிடப்பட வில்லை என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ.21 வரைபடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

40. பிராது 2ம் தபசில் சொத்தை நானோ என் முன் பாத்தியஸ்தர்கள் கிரையம் பெற்றதை பற்றி எனது பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் பதில் உரையில் குறிப்பிட்டுள்ளேன். 1ம் தபசில் சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் அனுபவத்தல் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்திற்கு மேல் பக்கம் உள்ள சொத்திற்கு செல்ல 1ம் தபசில் சொத்தின் வழியாக நான் பாதை கேட்டு அதை 1ம் பிரதிவாதி மறுத்தால் தான் நான் இந்த வழக்கை பொய்யான வழக்கு மூலம் கூறி தாக்கல் செய்துளேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்திற்கு மேல் பக்கம் உள்ள சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்து அச்சம்புதூர் பிரதான சாலையில் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு 1ம் தபசில் சொத்தின் வழக்கு மதிப்பு தெரியாது. கடந்த 50 ஆண்டுகளாக 1ம் தபசில் சொத்து விவசாய நிலமாக இல்லை என்றால்

சரியல்ல. எனது பிராதிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ நானோ எனது முன்னோர்களோ விவசாயம் செய்ததாக சொல்ல வில்லை என்றால் சரிதான். பிராது தாக்கல் செய்யப்பட்ட 2017 ல் பிராது தபசில் சொத்துகள் விவசாய நிலமாக இல்லை என்றால் சரிதான். எனவே வருவாய் தீர்வைகளின் அடிப்படையில் நான் செலுத்திய முத்திரை கட்டணம் தவறு என்றால் சரியல்ல. பிராது தாக்கல் செய்த சமயத்திலே பிராது தபசில் சொத்தின் மதிப்பு இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பை மீறியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராது தபசில் சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அதன் மதிப்பு எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் இல்லை என்பதாதால் தான் பிராது தபசில் சொத்தின் எல்கை மால் விவரத்தை குறிப்பிட்டு கூற முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

41. பிராது தபசில் சொத்து அச்சம்புதூர் பேரூராட்சியில் வார்டு 5 ல் 3 ம் தெருவில் உள்ளது. ஆனால் வா.சா.ஆ.16 வரைபடத்தில் 6 வது வார்டு ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. வா.சா.ஆ.23 ஆவணத்தில் வார்டு எண் சர்வே எண் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 அறிவிப்பானது வழக்கு சொத்திற்கான அறிவிப்பு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.23 ஆவணத்தின் உண்மை தன்மை அறிய வேண்டும் என்று சொன்னால் அச்சம்புதூர்

பேரூராட்சி அலுவலக நகலை வாங்கி பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து 1–5 வாதிக்கு 4ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டிருக்குமேயானால் அந்த அறிவிப்பானது மேற்படி நபர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால் எனக்கு மட்டும் அனுப்பினார்கள். வா.சா.ஆ.23 ஆவணம் மோசடி ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. மற்ற வாதிகளுக்கு அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

42. வா.சா.ஆ.24 எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை.

43. **நீதி மன்ற கேள்வி**

எந்த phone அல்லது camera ல் எடுக்கப்பட்டது என்றால் எனது samsung mobile ல் எடுக்கப்பட்டது. தற்போது அந்த மொபைல் எனது கைவசம் இல்லை. எந்த கடையில் print எடுத்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. எவ்வாறு நான் print எடுத்தேன் என்றால் கடை உரிமையாளரின் whatsapp எண்ணிற்கு அனுப்பி print எடுத்தேன். தற்போது அவரின் whatsapp எண் மற்றும் பெயரும் எனக்கு நியாபகம் இல்லை. அவரின் whatsapp எண்ணை நான் பதிவு செய்து வைத்துள்ளேன் என்றால் இல்லை. இந்த மொபைல் தற்போது காணாமல் போய்விட்டது. காணாமல் போனதற்காக நான் காவல்நிலையத்தல் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.

ஆ.20 மற்றும் 24 புகைபடங்கள் ஒரே நாளில் ஒரே மொபைலில் எடுக்கப்பட்டவை. அதை நான் ஒரே நாள் ஒரே கடையில் தான் print எடுத்தேன்.

44. வா.சா.ஆ.24 புகைபடம் எந்த நாளில் எடுத்தேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 2 புகைபடங்கள் எடுத்தேன். வா.சா.ஆ.24 புகைபடத்தில் வா.சா.ஆ.20 ஆவணத்தை 10.03.2026 ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதை எதனால் 10 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்தேன் என்றால் முதல் விசாரணையோடு தாக்கல் செய்யலாம் என்று செய்தேன். ஆனால் கட்டளை 7 விதி 14(3) ல் தாக்கல் இடைகால மனுவில் மேற்படி வா.சா.ஆ.20 ஆவணம் தற்போது தான் கிடைத்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.20 மற்றும் 24 புகைப்படங்கள் 1ம் தபசில் சொத்தின் கீழோரப்பகுதியை மட்டும் காட்டும் புகைப்படங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.20 மற்றும் 24 புகைப்படங்கள் 1ம் தபசில் சொத்தில் கீழ் பக்கம் உள்ள பிரதான சாலையில் இருந்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் வேறு யாராலும் எடுக்க முடியும் என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதால் தான் என்னால் 1ம் தபசில் சொத்தின் உட்பகுதியையும் இதர பகுதியையும் புகைப்படம் எடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படத்தில் உள்ள கருவேல மரங்களை 1ம்

பிரதிவாதியின் ஏற்பாட்டால் தான் அகற்றப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கிகாக தான் வா.சா.ஆ. 20 மற்றும் 24 புகைப்படங்களை எனது மொபைலில் புகைப்படம் எடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.20 ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற இந்திய சாட்சிய சட்டம் 65 பி கீழ் வழங்கப்பட்டுள்ள சான்றிதலின் கீழ் ராஜா என்ற புகைப்பட கலைஞர் தான் புகைப்படம் எடுத்ததாகவும் அதை தனது Dell கணினியில் பதிவிறக்கம் செய்து print எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. அது போல் மேற்படி புகைப்படத்தை 10.03.2025 ல் தான் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Studio வைத்திருப்பவர் எனக்கு வியாபார ரீதியாக பழக்கமானவர் . எனது வயலில் விளையும் காய்கறியை நான் வியாபாரம் செய்வேன்.

45. வா.சா.ஆ.35 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின் ஏற்படுத்தியது என்றால் சரிதான் ஆனால் வழக்குக்கு முன்பே தீர்வை செலுத்தி வந்தேன். எனவே வழக்கு சொத்தில் எனக்கு 4 ம் பிரதிவாதிக்கும் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து 1 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் முன் ஆவணங்களை பற்றி குறிப்புகள் இல்லாததால் மேற்படி ஆவணங்கள் ஏற்புடைய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 மற்றும் 24

ஆவணங்கள் 1ம் தபசில் சொத்தை மட்டும் காண்பித்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு தென்புறம் தான் 1ம் பிரதிவாதியின் வீடு மற்றும் சுப்பிரமணியத்தேவர் மற்றும் அவருடைய மனைவியின் சமாதியை மறைத்து தான் வா.சா.ஆ.20 மற்றும் 24 புகைப்படங்கள் ஏடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதனால் நான் காண்பிக்க வில்லை. இந்த வழக்கிற்கு நீதிமன்ற ஆணையர் அனுமதிக்கப்பட்டால் பாதகமாக அமையும் என்பதால் நான் நியமிக்க மனு செய்ய வில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 20 மற்றும் 24 புகைப்பங்களை பார்க்கும் போது கால்வாய்யை ஒட்டியே சுவர் கட்டப்பட்டது என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.16 ஆவணத்தின் படி நான் சுவர் கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுவர் 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுப்படி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**